செ. கு. எண்: 235 நாள்: 21.12.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 21.12.2018

5 ரூபாய் டாக்டர் என்று அன்புடன் அழைக்கப்பட்ட டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்கள் 19.12.2018 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

விவசாய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்கள், ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் மருத்துவச் சேவை அளித்திட வேண்டுமென்ற உயரிய நோக்கில், 1971–ஆம் ஆண்டு இராயபுரத்தில் ஒரு தனி மருத்துவமனையைத் தொடங்கி அப்பகுதி மக்களுக்கு 2 ரூபாய்க்கு சிகிச்சை அளித்தார்.

தனது ஊரில் மருத்துவம் பார்க்க வசதியில்லாமல் பலர் உயிரிழந்ததால், தன்னுடைய சிறு வயது முதலே மருத்துவம் படிக்க வேண்டும், மருத்துவராகி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற கனவுடன் வளர்ந்து மருத்துவரான டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்கள், கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக, ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் சிறந்த மருத்துவச் சேவையை வழங்கியுள்ளார்.

டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவருடைய தன்னலமற்ற சேவையை பல ஆண்டுகளாகப் பெற்று வந்த இராயபுரம் பகுதி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**